ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமோழி

# 1.9 – பொன்னியற்கிண்கிணி

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 1.9 – பொன்னியற்கிண்கிணி

‡ பொன் இயல் கிண்கிணி ⋆
சுட்டி புறம் கட்டி ⋆
தன் இயல் ஓசை ⋆
சலன் சலன் என்றிட ⋆
மின் இயல் மேகம் ⋆
விரைந்தெதிர் வந்தாற் போல் ⋆
என் இடைக்கோட்டரா அச்சோ அச்சோ ⋆
எம்பெருமான் ! வாரா அச்சோ அச்சோ ‖ **1.9.1** ‖

செங்கமலப் பூவில் ⋆
தேன் உண்ணும் வண்டே போல் ⋆
பங்கிகள் வந்து ⋆
உன் பவள வாய் மொய்ப்ப ⋆
சங்கு வில் வாள் தண்டு ⋆
சக்கரம் ஏந்திய ⋆
அங்கைகளாலே வந்தச்சோ அச்சோ ⋆
ஆரத் தழுவாய் வந்தச்சோ அச்சோ ‖ **1.9.2** ‖

பஞ்சவர் தூதனாய்ப் ⋆
பாரதம் கைசெய்து ⋆
நஞ்சுமிழ் நாகம் கிடந்த ⋆
நல் பொய்கை புக்கு ⋆
அஞ்சப் பணத்தின் மேல் ⋆

பாய்ந்திட்டருள் செய்த ⋆
அஞ்சன வண்ணனே ! அச்சோ அச்சோ ⋆
ஆயர் பெருமானே ! அச்சோ அச்சோ ॥ **1.9.3** ॥

நாறிய சாந்தம் ⋆
நமக்கிறை நல்கென்னத் ⋆
தேறி அவளும் ⋆
திருவுடம்பில் பூச ⋆
ஊறிய கூனினை ⋆
உள்ளே ஒடுங்க ⋆
அன்று ஏற உருவினாய் ! அச்சோ அச்சோ ⋆
எம்பெருமான் ! வாரா அச்சோ அச்சோ ॥ **1.9.4** ॥

கழல் மன்னர் சூழக் ⋆
கதிர் போல் விளங்கி ⋆
எழலுற்று மீண்டே ⋆
இருந்துன்னை நோக்கும் ⋆
சுழலைப் பெரிதுடைத் ⋆
துச்சோதனனை ⋆
அழல விழித்தானே ! அச்சோ அச்சோ ⋆
ஆழி அங்கையனே ! அச்சோ அச்சோ ॥ **1.9.5** ॥

போர் ஒக்கப் பண்ணி ⋆
இப்பூமிப்பொறை தீர்ப்பான் ⋆
தேர் ஒக்க ஊர்ந்தாய் ⋆
செழுந்தார் விசயற்காய் ⋆
கார் ஒக்கும் மேனிக் ⋆
கரும் பெருங்கண்ணனே ! ⋆

ஆரத் தழுவாய் வந்தச்சோ அச்சோ ⋆
ஆயர்கள் போரேறே ! அச்சோ அச்சோ ‖ **1.9.6** ‖

மிக்க பெரும் புகழ் ⋆
மாவலி வேள்வியில் ⋆
தக்கதிதன்றென்று ⋆
தானம் விலக்கிய ⋆
சுக்கிரன் கண்ணைத் ⋆
துரும்பால் கிளறிய ⋆
சக்கரக் கையனே ! அச்சோ அச்சோ ⋆
சங்கம் இடத்தானே ! அச்சோ அச்சோ ‖ **1.9.7** ‖

என் இது மாயம் ⋆
என் அப்பன் அறிந்திலன் ⋆
முன்னைய வண்ணமே கொண்டு ⋆
அளவாய் என்ன ⋆
மன்னு நமுசியை ⋆
வானில் சுழற்றிய ⋆
மின்னு முடியனே ! அச்சோ அச்சோ ⋆
வேங்கட வாணனே ! அச்சோ அச்சோ ‖ **1.9.8** ‖

கண்ட கடலும் ⋆
மலையும் உலகேழும் ⋆
முண்டத்துக்காற்றா ⋆
முகில்வண்ணா ஓ ! என்று ⋆
இண்டைச் சடைமுடி ⋆
ஈசன் இரக்கொள்ள ⋆

மண்டை நிறைத்தானே ! அச்சோ அச்சோ ⋆
மார்வில் மறுவனே ! அச்சோ அச்சோ ‖ **1.9.9** ‖

துன்னிய பேர் இருள் ⋆
சூழ்ந்துலகை மூட ⋆
மன்னிய நான்மறை ⋆
முற்றும் மறைந்திட ⋆
பின் இவ்வுலகினில் ⋆
பேர் இருள் நீங்க ⋆
அன்றன்னமதானானே ! அச்சோ அச்சோ ⋆
அருமறை தந்தானே ! அச்சோ அச்சோ ‖ **1.9.10** ‖

‡ நச்சுவார் முன் நிற்கும் ⋆
நாராயணன் தன்னை ⋆
அச்சோ வருக என்று ⋆
ஆய்ச்சி உரைத்தன ⋆
மச்சணி மாடப் ⋆
புதுவை கோன் பட்டன் சொல் ⋆
நிச்சலும் பாடுவார் ⋆
நீள் விசும்பாள்வரே ‖ **1.9.11** ‖

அடிவரவு — பொன் செங்கமலம் பஞ்சவர் நாறிய கழல் போர் மிக்க என்னிது கண்ட துன்னிய நச்சுவார் வட்டு

பொன்னியற்கிண்கிணி முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்